RESEARCH ARTICLE

INDIAN JOURNAL OF MULTILINGUAL RESEARCH AND DEVELOPMENT

Asian Research Association

DOI: 10.54392/ijmrd2432

# Bharati's Love for Children

**V. Geetha** [a,*]

[a] Department of Tamil, A.Veeriya Vandayar Memorial Sri Pushpam College, Poondi, Thanjavur-613503, India.

*Corresponding author Email: ageethaageeths@gmail.com

DOI: https://doi.org/10.54392/ijmrd2421

Received: 01-07-2024; Revised: 12-09-2024; Accepted: 18-09-2024; Published: 21-09-2024

**Abstract:** Bharathi was born as the poet who gave birth to the sunrays that burst from the ancient 'Tamil' seed. It was a green tree of valour, love, devotion, language, freedom and social consciousness. We can see some changes happening in our lives. Mahakavi Bharathiar was the one who directly sensed this situation. Isn't that all there is to him? Is this what brought him to the top of the world?. Love hurts a man. The injury hurts a lot. Pain is a good lesson. Good maturity. Let the world exalt him who is of good character as the highest of men. It is a universal case that if there is a desire for everything, then there is no joy, but there is an experience of life. Bharati was the one who was elevated with such desire and experience.

**Keywords:** Mahakavi, Bharathiyar, Love, Maturity

**Language: Tamil**

## பாரதியின் பிள்ளைக்காதல்

வீ. கீதா [அ *]

[அ] தமிழ்த்துறை, அ. வீரையா வாண்டையார் நினைவு திரு புட்பம் கல்லூரி (தன்னாட்சி), பூண்டி, தஞ்சாவூர்-613503, இந்தியா

## முன்னுரை

பாரதி பழம்பெரும் ‘தமிழ்’ வித்திலிருந்து வெடித்துச் சிதறிய சூரியக் கதிர் பிரசவித்தகவிதை என்னும் தலவிருட்சமாகப் பிறந்தவர். அந்த தலவிருட்சத்தில் இளைப்பாறியவைகள் வீரம், காதல், பக்தி, மொழி, விடுதலை, சமூகச்சிந்தனை என அத்தனையும் தாங்கிய, பசுமை மரமாகத் தழைத்து நின்றது.

“பொய்யாய் பழங்கதையாய் கனவாய்

மெல்லப் போனதுவே” பட்டினத்துப் பிள்ளை

மனித வாழ்க்கையில் சில நிகழ்வுகள் கனவாய் மாறிப்போகும் சூழலை நம் கண் முன்னே காணலாம். அந்தகைய சூழலை நேரடியாக உய்த்துணர்ந்தவர் நம்மகாகவி பாரதியார். அவருக்குள் இத்தனைக்காதலா? இந்தக்காதல் தான் அவரை உலகத்தின் புகழின் உச்சிக்கு எடுத்துச்சென்றதா? காதல் ஒரு மனிதனுக்கு காயத்தைத்தரும். காயம் பல வலியைத்தரும். வலி நல்ல பாடத்தைத்தரும். நல்ல பக்குவத்தைத்தரும். நல்ல பண்பைத்ததரும். அந்தப்பண்பே மானிடர்களுக்குள்ளே உயர்ந்த மானிடர்களாக உலகிற்கே உயர்திக்காட்டும். அத்தனைக்கும் ஆசைப்படு கிடைத்தால் மகிழ்ச்சி இல்லையேல் வாழ்க்கைக்கு கிடைத்த அனுபவபாடமாக்கு என்பது உலகியல் வழக்கு. அத்தகைய ஆசையையும் அனுபவத்தையும் பெற்று உயர்த்தப்பட்டவர்தான் பாரதி.

## சிறுவயது ஏக்கம்

சின்னஞ்சிறு வயதிலே மற்றபிள்ளைகள் போல் ஓடி விளையாட முடியாது. வீட்டில் அடைப்பட்டு தந்தைசொல் மீறாத பிள்ளையாக வாழ்ந்தார், வளர்ந்தர்.

"வேண்டு தந்தை விதிப்பினுக் கஞ்சியான்

வீதி யாட்டங்களேதினும் கூடிலேன்"(பி.கா 4)

அவரின் ஏக்கத்தினை வெளிப்படுத்தும் கவிதையாகும். ஏக்கபடும் வாழ்க்கை ஏடெடுத்து எழுதவைக்கும். ஏங்கியவைகளைச் சொல்லி, கவிதை வடிக்கும். கவிதை வடித்த தால் தான் மகாகவிஞனான் (Govindan, 2003).

## பிள்ளைக்காதல் விளக்கம்

காதல் என்பது ஆதிச் சமூகத்தில் உருவானது. காதலுக்கு பிறந்தமக்கள் காதலை அழிப்பதேனோ. மிருகக்குணம் கொண்டு வாழ்ந்து மண்ணில் மடிந்து மக்கிப்போகும் வெறும் எலும்புக்கூடோ? உலக இயக்கிற்கு அன்பு அவசியமான ஒன்றாகும். மனிதர்கள் இதை உணரவேண்டும். பிரபஞ்சத்தில் வாழக்கூடிய ஒவ்வொருவரும் தங்களை ஈர்த்துக்கொண்டு வாழும் வாழ்வே அன்பு மற்றும் காதல் வாழ்க்கையாகும். அன்பு குறித்து திரு மூலரும் கூறி உள்ளார்.

அன்பின் வடிவமாகவே ஆண்டவன் அமர்ந்துள்ளான். என ஆன்றோர் உரைப்பர், 'அன்பே சிவம்' என்ற நிறை மொழியும் இதனையே விளக்கி நிற்கிறது. திருமூலரும்,

அன்பு சிவம்இரண் டென்பர் அறிவிலார் அன்பே சிவமாவ தாரும் அறிகிலார் அன்பே சிவமாவ தாரும் அறிந்த பின் அன்பே சிவமாய் அமர்ந்திருந் தாரே-திருமந்திரம் : 270

அன்பும் சிவமும் ஒன்றென்று, அன்பினைக் கண்டார் திருமூலர். எனவே

ஆராத அன்பின் முதிர்ந்த நிலையே அருள் என்பது. தொடர்புடையாரிடத்துக் கொள்ளும் பரிவே அன்பெனப்படும்;

அன்பு, காதல் -நேசம், பாசம், பண்பு, போன்ற பலபொருளைத்தருகிது.

"காதல் மிகவும் ஆழமான, அற்புதமானதொரு வலி. நீங்கள் செய்கின்ற ஒவ்வொன்றும் காதலுடன் இருக்க வேண்டும். நீங்கள் காதலில் இருக்கும்போது, ஒருமரத்தைப் பாருங்கள் அதைக் காதலிப்பீர்கள் ஒரு மலரைப் பாருங்கள், அதைக் காதலிப்பீர்கள்; நீங்கள் வானத்தைப் பாருங்கள், அதைக் காதலிப்பீர்கள். ஒவ்வொன்றும் அழகுதான். காதல் என்பது ஒரு பண்பு அல்லது. தியானம் அல்லது ஆன்மீகம், அது ஒரு புதிய பரிமாணம். அன்பு என்பது ஒவ்வொருவரது வாழ்க்கையிலும் மிக முக்கியமான ஒரு அம்சமாக இருக்கிறது. அன்பு என்றால் உங்கள் உணர்ச்சிகளுக்கு இனிமையாக உள்ளன என்பது பொருள். உங்களது உணர்ச்சிகள் இனிமையுடன் இருந்தால், நீங்கள் இயற்கையாகவே அன்பாக இருக்கிறீர்கள். நீங்கள் பார்ப்பது என்னவாக இருந்தாலும், அது ஒரு ஆணாக, பெண்ணாக, குழந்தையாக, மரமாக, விலங்காக, பறவையாக அல்லது நீங்கள் சுவாசிக்கும் காற்றாக இருந்தாலும்கூட, நீங்கள் அன்புடன் எதிர்கொள்வீர்கள். நீங்கள் உள்ளே சுவாசிக்கும் காற்றை உங்களால் அன்புடன் உள்வாங்க முடியும். காற்றுக்கு நினைவாற்றல் உண்டு. "இந்த நபர் என்னை நேசிக்கிறார்" என்பதை காற்று நினைவில் வைத்திருந்தால், அது உங்களுக்கு அற்புதமாகச் செயல்படும். தண்ணீரை அன்புடன் அருந்துங்கள்.நீருக்கு நினைவாற்றல் உண்டு. இது ஒரு விஞ்ஞானபூர்வமான உண்மை. நீருக்கு, தான் அன்புடன் அருந்தப்படுவது நினைவில் நின்றால், அது உடலுக்குள் சென்று, உங்களுக்குள் அற்புதமான விஷயங்களைச் செய்யும். நீங்கள் உண்ணும் உணவு, நீங்கள் சுவாசிக்கும் காற்று, நீங்கள் அருந்தும் நீர், நீங்கள் கால் பதிக்கும் இந்த மண் இவைகள் அனைத்தையும் அன்புடன் அணுகுங்கள். வாழ்க்கை அற்புதமாக மாறும். ஆகவே, அன்பு என்பது உறவுமுறை சார்ந்தது அல்ல. அன்பு உங்களது தன்மையாக இருக்கிறது. நீங்கள் எல்லாவற்றையும் அன்புடன் அணுக முடியும்." என்று அன்பின் மகத்துவம் அழகாக விளக்கப்பட்டதைக் கண்டோம்.

## தொல்காப்பியத்தில் அன்பு, காதல் விளக்கம்

இலக்கண நூலாசிரியர் தொல்காப்பியரும் காதலுக்கு பின்வரும் விளக்கத்தைத் தருகிறார்.

“காமஞ் சாலா இளமை யோள்வயின்

ஏமஞ் சாலா இடும்பை யெய்தி

நன்மையும் தீமையும் என்றிரு திறத்தான்

தன்னொடும் அவளொடும் தருக்கிய புணர்த்துச்

சொல்எதிர் பெறாஅன் சொல்லி இன்புறல்

புல்லித் தோன்றும் கைக்கிளைக் குறிப்பே

மேல் நடுவணைந்திணைக்குரிய

பொருண்மையெல்லாம் கூறினார்.

இது கைக்கிளையாமாறு

உணர்த்துதல் நுதலிற்று. (Sivalinganar & Visayaragavan, 2015)

ஓர் இளைஞன் பெண்ணொருத்தியைக் கண்டு காமவுணர்வு கொண்டான். இவன் இங்ஙனம் ஆனானேயன்றி அவளிடத்து யாதொரு குறிப்பும் தோன்றவில்லை. அதனால் இவள் காமத்திற்குரிய பருவம் நிரம்பாத பெண் என்று அறிந்துகொண்டான் என்பது ஒரு பொருள். இவள் மலராத முகை என்று தன் காதல் ஓட்டத்தை நிறுத்திக் கொண்டான் எனவும் இதனால் அறியப்படும். மற்றொரு பொருள், ஆளாகாத பெதும்பை என்று தெரிந்தே ஒருத்தியை ஒருவன் காதலித்தான். அவள்பால் காதலரும்பு தோன்றாமையின், தன் உணர்வைத் தடுத்துக்கொண்டான் என்பது. இதுவே எல்லாரும் கருதி எழுதிவரும் பொருள்." இங்கு காமம் என்பது காதல் என்னும் பதத்தைத் தருகிறது.

## வரலாற்றில் இடம்பெற்ற காதலர்கள்

அன்பு என்னும் காதலில் தன்னை இணைந்து சோதனைகளை வென்று வாழ்ந்த சாதனை காதலர்கள். உலகம் அறிவியல் கண்டுபிடிப்புகள் நிகழ்த்துவதற்கு முன்னே அன்பு என்னும் காதல் கண்டுபிடிப்பை நிகழ்த்திய பிரபஞ்சத்தின் இணைப்பு சக்திகள் என்றே இவர்களைக் கூறலாம் .இவர்கள் வரலாற்றினை வாசிக்கும் போதுதான். காதல் வாழ்வியலின் தன்மை புலப்படும். அத்தகைய காதல் வாழ்வியலின் வரலாற்றைப் புலப்படுத்தியவர்கள்

பார்வதி -சிவன்,

ராதா கிருஷ்ணன், சீதா -ராமன்

லைலா-மஜ்னு, ரோமியோ-ஜீலியட்

ஷாஷஹான்-மும்தாஜ், மீராபாய் -கிருஷ்ணன்,

அனார்கலி-சலீம், பாஜிராவ்-மஸ்தானி,

பிருதிவிராஜ்சவுகான்-சன்யோகிதா

துஷ்யந்தன்-சகுந்தலை,

சாவித்திரி-சத்யவன்,

போன்றவர்கள் தான் அன்பு கொண்டு வாழ்ந்த வாழ்வியலை உலகிற்கு உணர்த்தியவர்கள். காதல் சாம்ராஜ்யத்தில் தன்னை இணைத்து வாழ்ந்தவர்கள். இவர்களில் ஒருவராக விளங்கிய பாரதியாரும் தனக்கு ஏற்பட்டப்பிள்ளைக்காதல் அனுபவத்தை காவியமாக்கினார்.

### பிள்ளைக்காதல்

பாரதி பிள்ளைப் பருவத்தில் ஏற்பட்ட கனவு நிகழ்வு ஒன்றை முன் வைக்கிறார். தனது கனவின் மூலம் உலகியலுக்கு உணர்த்தக்கூடிய செய்தி மானிட வாழ்வியலின் இயல்பு தன்மையையும், மனிதனுக்கு காதல் வந்த நிலையில் அவனுக்குள் ஏற்படும் மாற்றங்களையும் தான் பெற்ற அனுபவத்தை கவிதைவரியில் புலம்புகிறார். பாரதியார் பிள்ளைப் பருவத்திலே எனக்கு உற்ற ஒரு கனவு போன்ற அனுபவத்தினை எப்படி தமிழில் சொல்லுவேன். அவ்வளவு சக்தி வாய்ந்தக் கனவாக, மகத்துவம் வாய்ந்தக் கனவாக சொல்லில் அடங்காக் கனவாக இருக்கின்றது. நான் சொல்கின்ற சிறப்பான இனிமையான கனவு என் தூக்கத்தில் வந்த கனவு கிடையாது அது என் நினைவிலே நிகழ்ந்து..

“அன்ன போழ்தினி லுற்ற கனவினை

அந்தமிழ்ச்சொலில் எவ்வணம் சொல்லுகேன்?

சொன்ன தீங்கன வங்குத் துயிலிடைத்

தோய்ந்த தன்று,நனவிடைத் தோய்ந்ததால்”.(பி-கா 5)

என்று தனக்கு ஏற்பட்ட கனவின் அனுபவத்தை விளக்குகிறார் (Govindan, 2003).

மெல்லிய நடையிலே இருக்கக்கூடிய கனிவான சொற்களையும்,அழகிய கரிய விழியை உடையவள். அவள் மேனி எங்கும் நறுமணம் வீசக்கூடியவளாகத் திகழ்கிறாள் அவளைப்பார்க்கும் போது பெண்ணோ! தேவதையோ!என்று எண்ணத்தோன்றும். அத்தகையப் பெண்ணைக் கண்டுக் காதல் வெறியுடன் கலந்து காதலில் ஈடுபட்டேன்.

“மென்னடைக்கனியின் சொற்கருவிழி

மேனி யெங்கும் நறுமலர் வீசிய

கன்னி யென்றுறு தெய்வத மொன்றனைக்

கண்டு காதல் வெறியில் கலந்தனன்”.( பி.க:5)

பாரதி காதலில் ஈர்ப்புடன் கலந்த நிலையை இதில் விளக்குகிறார்.

நான் காதல் கொண்ட ஒன்பது வயதுடைய அந்தப்பெண் என் கண்களுக்கு சகுந்தலைப் போன்ற அழகுடையவளாகவும் பெண்தேவதைப் போன்றும் தெரிந்தாள்.

ஒன்ப தாயபிராயத்த ளென்விழிக்

‘கோது காதைச் சகுந்தலையொத்தனள்” (பி.கா 6)

என்று அந்தப்பெண்ணைப் பார்த்து வியந்து நின்ற செய்தியை விளக்குகிறார்.நான் என்ன செய்வேன்.அன்பு என்னும் பெரிய வெள்ளத்தில் நம்மை இழுக்கும் பொழுது யாரால் தப்பிக்க முடியும். முன்பு வாழ்ந்த முனிவர்களை எல்லாரையும் வென்றவில் காமன் வில். ரம்பை, ஊர்வசி, மேனகை போன்றவர்களிடம் முனிவர்கள் அம்பு வயப்பட்டார்கள். காமதேவனுடைய வில் முனிவர்களையே வெல்லும் போது சிறு ஏழை, நான் மட்டும் எப்படிப் பிழைப்பேன்?

“அன்பெனும் பெருவெள்ளம் இழுக்குமேல்

அதனை யாவர் பிழைத்திட வல்லரோ ?

முன்பு மாமுனி வோர்தமொ வெற்றறவில்

முன்னரேழைக்குழந்தையென்செய்வனே' (பி.கா.6)

வயது முதிர்ச்சியடைய காதல் மாசு உடையது, குழந்தை காதலோ தெய்வீகமானது அவற்றைப்பாரதி

“வயது முற்றிய பின்னுறு காதலே

மாசுடுடைத்தது தெய்விக மன்றுகாண்"(பி.கா 7)

காதல் என்பது ஒரு தெய்விக மான உணர்வு.அந்த உணர்வு அவனைவழிநடத்தும்.என்று காதலின் தெய்விகத்தன்மையை முன் வைக்கிறார்.

அழகிய பெண்களை திருமணம் செய்வதற்காக விரும்பக்கூடிய பாலகர்கள் அவர்களுக்குத் தேவையான தெய்விக காதல். ஈர்ப்பு என்பதுஎல்லா உயிர்களிடமும் ஏற்படும். ஈர்ப்பு எங்கிருந்து தோன்றுகிறதோ, அதை தான் நம் மனமும் நாடுகிறது.

நாயமிகுந்தனி மாதை மாமணம்

நண்ணு பாலர் தமக்குரித் தாமன்றோ...(பி.கா-7)

மனம் எதை விரும்புகிறதோ அதையே தமக்குரியதாக்கிக் கொள்ளும்.என்ற உண்மையை பாரதி முன் வைக்கின்றார்.

கயல்விழிப் போன்ற கண்ணுடைய அந்தப் பெண் மானைக் காணும் போது காமனுடைய அம்புகள் என் உயிரிலே போய் கலந்து வதைக்கத் தொடங்கின என்று தன்காதல் உணர்வை வெளிப்படுத்துவிதம் அதன் வலி உணர்ந்த நமக்கு புலனாகிறது. வலி மகத்துவத்தின் வெளிபாடு. வலியை உணரும் ஒவ்வொருவனும் மகத்துவமானவர்களாக உருக்கொள்வர். அவ்வாறே பாரதியும் உருக்கொண்டுள்ளார் (Govindan, 2003).

## கடவுள் மீது காதல் கொண்டவர்கள்

காதல் வாழ்க்கை மனிதர்களுக்குளே மட்டும் நிகழக்கூடியவை அல்ல. கடவுள் மீதும் அன்புக்கொண்டு ஒன்றியவர்களாக கனகன் மைந்தன் குமரகுருபரன், கனியும் ஞானசம்பந்தன், துருவன் மற்ற ஏனையவர்கள். கடவுள் மீது காதல் கொண்டுத் தன் உயிரை வாட்டிக் கொண்டவர்கள். கடவுளின் மீது கொண்ட காதல் வாழ்க்கைக்கு முழுமையாக அர்பணித்து வாழ்ந்தவர்கள்

"கனகன் மைந்தன் குமர குரபரன்

கனியுகம் ஞானசம்பந்தன் துருவன் மற்

றெனையர் பாலர் கடவுள் மீதுதாம்

எண்ணில் பக்திகொண்டின்னுயிர் கண்டவே"...(பி.கா 8)

## காமனுக்கு உயிரை நல்குதல்

காமன் விருப்பத்தை கொடுக்கக் கூடியவன். காமம் என்ற காதல் எல்லா உயிர்களுக்கும் வரும். காதலுக்கு தலைவன் மன்மதன். மன்மதனாகிய காமக் கடவுளாகியவன் உண்ணுவது நம் மனதை தான். மனதை உண்ட தேவனுக்கு என் உயிரை நல்கினேன். மனதைத் தின்ற மதன தேவனுக்கு தன் உயிரைக் கொடுத்த ஞானசம்பந்தன் முதலியோர் வான் புகழை அடைந்தனர். நான் பெற்றது என்ன என்பதை பின் கூறுகிறேன் என்கிறார்.

"மனதிலே பிறந்தோன் மன முண்ணுயிர் நல்கினேன்;

மனமுரைத்தவர் வான் புகழ் பெற்றனர்

மூடனேன் பெற்றதோதுவன் பின்னரே.

என்று பாரதியார் கூறுகிறார்.

## நீரெடுத்து வரும் பெண்

பாரதியார் மனதைக் கவர்ந்த அந்தப்பெண் நீர் எடுத்து வரும் போது அவரைப் பார்த்து புன்முறுவல் செய்வாள், அதற்காக வழியில் தினமும் காத்திருக்கிறார்.அது எவ்வாறு உள்ளது என்றால் சுதந்திர நற்பயிரைக்காக்க தேசபக்தர்கள் நாட்டின் நன்மை வேண்டி காத்திருப்பார்களே அதே போல் அந்த பெண் நீரெடுத்து வரும் வரைக்காத்திருக்கிறேன் என்று கூறுகிறார் அவ்வாறு காத்திருந்து அவள் போகக் கூடிய வழியில் நின்று அவள் பின்னழகைக் கண்டு களிப்பது என்று நாட்கள் பல கழிந்தன என்கிறார். அது எவ்வாறு இருந்தது என்றால் ஏழை ஒருவன் தேர் இழுக்க வந்து ,தேர் சக்கரத்தில் மாட்டிக்கொண்டது போல இருந்தது. தேர் போகும் இடத்திற்கெல்லாம் போக வேண்டும். அதுபோல அவள் வருகைக்காக காத்து நிற்பது அவளைக்கண்டு கழிப்பது என்ற நிலையிலே, அந்த எண்ணத்திலே மகிழ்ந்து கழித்தேன். இவ்வாறே பல நாட்கள் கழிந்தன.நீரெடுத்து வரும் பெண் வதனம்சுடரொளிப்போன்று ஒளி வீச மெல்லியப் புன்னகையுடன் திரும்பி என்னைக் காணும் போதெல்லாம் என் உடல் புத்துயிர்பெறுமே என்று கூறுகிறார்.

நீரெடுத்து வருதற் கவள் மணி

நித்திலப்புன்னகை சுடர் வீசிடப்......

பூத்த ஜோதி வதனம் திரும்புமேல்

புலனழிந்தொரு புத்துயிர் ரெய்துவேன். . (பி.கா 8-10)

என்று கூறுகிறார் (Govindan, 2003).

## ஞானிகள் கூறியது

ஐந்து புலன்கள் வழியாக விருப்பம் கொண்டு நிற்கக் கூடிய மானிடன் அடையக்கூடியப் பயன் என்ன என்பதை சாத்திரம் படித்த ஞானிகள் கூறுகிறார்கள். ஐந்துப் புலன் வழி கிடைக்க கூடிய சுகத்திற்கு மானிடன் முயற்சிப்பானேன் என்றால் அது மானிடர்களுக்கிடையே நிகழ்வது இயல்பான ஒன்றுதான். அவ்வாறு ஞானிகள் சொன்ன விடயமும் எனக்கும் தெரியும் என்று பாரதி கூறுகிறார்.மனிதனாகப்பிறந்த ஒவ்வொரு வருக்கும் உடலிலும்,மனதிலும் மாற்றங்கள் நிகழ்வது இயல்பு.மனிதக்குலம் தழைப்பதற்கு ஒருவர்மீது ஒருவர் விருப்பம் கொள்வதும் ,அதில் தன்னை இணைத்து வாழ ஆசைக்கொள்வதும் உலக வழக்கு.இதில் குற்றம் கண்டு,உயிரைக்கொள்வது ஏனோ? அவர்களை அழிக்கும் உரிமை எந்த உணர்வு வழங்கியது? அன்பென்னும் பிடியில் அகப்பட்டவர்கள் அழிக்கபட்ட வரலாறு எந்த முடிவைத்தருமோ? மனிதனுக்குள் இருக்கும் மனிதத்தன்மை வெளிப்படாமல் மிருகக் குணம் வெளிப்பட்டதால் தான் இத்தனை உயிர்ப்பலியோ.? இயற்கைவிதிக்கு எதிர்வினை வகுத்த அத்தனை மனிதக்குலத்திற்கும் ,அதே வினையால் வினைவகுத்துக்கொடுக்கும் இயற்கை மானிடா? இயற்கை விதித்த அறத்திற்கு கலங்கம் விளைவிக்காதே. பாரதி இயற்கையை நேசிப்பவன். இயற்கையைமீறி அவன் புலங்கள் செயல்பட்டதில்லை. அதனால்தான் துணிந்துக்கூற முற்பட்டான்.

புலங்களோடு கரணமும் ஆவியும்

போந்து நின்று விரும்பும் மானிடன் ...

இலங்கு நூலுணர் ஞானியர் கூறுவர்;

யானும் மற்றது மெய்யெனத் தேர்ந்துளேன்..

விலங்கியற்கை யில்லையெனில் யாமெலாம்

விரும்பு மாட்டினீல்லவிண்ணுறலாகுமே.(பி.கா.11)

மனிதற்கு இது போன்ற செயல்கள் நடப்பது இயல்பான ஒன்றுதான் .நமக்கு விலங்கு குணம் யில்லையெனில் நாமெல்லாம் விரும்பு விண்ணவர் வாழ்க்கை எய்தி வாழ்ந்திடுவோம். மனிதன்மையுடன் வாழ்வதும் அறமே என்கிறார் பாரதி.விண்ணெய்தி வாழு வாழ்க்கையை விட

மண்ணில் நல்ல வண்ணம் வாழ்ந்திடலாமே.அன்புக்கொண்டும் வாழ்வதில் என்னக்குற்றம் என்று தன் அன்பு வயப்பட்ட நிலையைத் துணிந்து சொல்லி சென்றான் பாரதி (Govindan, 2003).

## பாரதிக்கு உலகம் உணர்த்திய உண்மை

சூழ்ந்திருக்கக்கூடிய இந்த மாயமான உலகிலேயே நாம் பார்க்கக்கூடிய பொருளில் ஆழ்ந்து விருப்பம் கொண்டு, நெஞ்சத்திலே ஆசை ஏற்படுமேயாயின் அதனுடைய பொருள் நாளை வெளிப்பட்டு வரும். மனசு இல்லாதவனுக்கு பிரபஞ்சம் கிடையாது. அடிக்கடி வேறு பொருளை நாடுபவர்களுக்கு வேறு பொருள் கிடைக்காது. ஆடு,போல் நுனிப்புல் மேய்ப்பவர்களுக்கு எதையுமே சிந்திக்கக் கூடிய திறன் ஏற்படாது. சின்னத் தடை வந்து விட்டாலும் அதை விட்டு ஓடிப் போவார்கள் .இவர்கள் விரும்பக்கூடிய பொருள்களைப் பெற மாட்டார் இப்படி ஆகிப் போனால் விதியை நோவார், நண்பரையே தூற்றுவார், பொங்கி சதிகள் செய்வார், சாத்திரத்தை பொய் என விளக்கம் கொடுப்பார். என்று மனிதர்கள் மனநிலையை எடுத்து இயப்புகிறார்.

## வார்த்தையால் உணர்த்த இயலாது

கண்ணில்லாதவர் தங்களை சுற்றி நடக்க கூடியவற்றை காண முடியாதது போல இது போன்ற விடயங்களை பகிர்வர். அந்த பெண் மீது காதல் உற்ற நான், எனக்கு ஏற்பட்ட கவலைகளைக் கோடி கோடி யாகச்சொல்வேன். நாம் உணரும் பக்தியின் பரவசத்தை அதன் பான்மையை வார்த்தையால் உணர்த்திட முடியுமா?.அதை உணரதான் முடியுமா?. உணர்பவர்களுக்குள்ளே உணர்வது பண்பாகும். வானத்தில் இருக்கும் தேனுக்கு ஆசைப்பட்ட முடவனுக்கு கால் முளைத்தது போல அந்தநிகழ்வு எனக்கு நிகழ்ந்தது. என்னிடம் வந்து, அவள் கருணைக்காட்டியது அது எப்படி நிகழ்ந்தது? காதல் என்பது ஒரு அளவிற்கு மேல் போனல் கடலில் போட்ட கடுகு போல்ஆகிவிடும். அதற்கு இணையாக அமிர்தம் கொடுத்தாலும் ஈடு ஆகுமோ? சொல்ல முடியாத அளவிற்கு பெண்ணின் மீது தான் வைத்த காதலை அந்தப் பெண் ஒத்துக் கொண்டாள் என்றால் அவன் எப்படிப்பட்டவன் ஆவான். தேவருடைய வாழ்வை விட மேலான வாழ்வை வாழக்கூடிய அளவிற்கு போய் விடுவான். மீட்கக்கூடிய மேகத்தில் வாடக்கூடிய நிலவைப் போல, பனி மூடிய மலரை போல, பாலில் வேப்பங்காயை கலந்தது போல பொய் பொய்யாய் சொல்லி காதலில் மெய்யாய் இணைந்திடுவோம். காதலென்னும் பெருந்துயரில் மூழ்கிடுவோம்.

மொய்க்கும் மேகத்தின் வாடிய மாமதி மூடு வெம்பனிக் கீழுறு மென்மலர், கைக்கும் வேம்பு கலந்திடு செய்யபால் காட்சி யற்ற கவினுறு நீள்விழி பொய்கிளைத்து வருந்திய மெய்யரோ பொன்ன னாரருள் பூண்டில ராமெனில்

“கைக்கிளைப்பெயர் கொண்ட பெருந்துயர்க்

காதலஃது கருதவும் தீயதால்” ( பி.கா-16)

பாரதி காதலில் நிகழும் இயல்பினை விளக்குகிறார்.

## புகழ்ந்துப் பாடுதலைவிடுதல்

காதலில் ஈடுபட்டிருந்தப்பொழுது தேவர் மன்னர் போன்றவர்களை புகழ்ந்து பாடும் பாடலை விட்டு விட்டு கைகிளைப் பாடலான காதலில் நான் திளைக்கிறேன். அந்த நிலையில் எனக்கு பாவம், தீமை, பழி மொழியே, தெரியாது, பண்டைத் தேவயுகத்து மனிதர் போல் காவல், கட்டு விதிவழக்கென்றிடும் கயவர்கள் செய்திகளேதும் அறிந்திலோம். காட்டில் இரு பறவைகள் ஒன்றோடு ஒன்று காதல் பயப்பது போல் நாங்கள் வாழ்ந்து வந்தோம். உயிரோடு உயிர் ஒன்றியத்தை தவிர உடலோடு உயிர் ஒன்றவில்லை, தேனினும் இனிய மணிமொழியாள் அவளோடு இருந்த நாட்கள் தெய்வீக நாட்கள் என்கிறாள்.

## திருவாதிரையில் திலகிமிட்டாள்

அழகான அந்த சின்ன வயது நாட்களில் சங்கரன்கோவில் திருவாதிரை நட்சத்திரம் ஆதிரைத் திருநாளன்று சோதி நிறைந்த நன்னாளில் ஒளிவீசக்கூடிய மான் போல் அழகான அவளோடு நான் பேசிக்கொண்டு இருந்தேன். பேசிக்கொண்டிருக்கும் போதே பாதியில் விட்டு யெழுந்து செல்வாள். பின் மீண்டும் தோன்றி அவள் கையில் மைகொணர்ந்து என் நெற்றியில் பொட்டு வைப்பேன் என்பாள். சொல்லிக் கொண்டே எனக்குத் திலகமிட்டாள் நான் என்ன செய்யவதன்று தெரியது தன்னிலை இழந்தேன்.

## தாய்க்கு செந்தமிழ் பா

என்னைப் பெற்றத்தாய் ஐந்து வயதில் என்னை ஏங்க விட்டு விண்ணெய்தினார். என்னை விட்டு பிரிந்த என் தாய்க்கு செந்தமிழ்ச் செய்யுளால் சிவபூஜை செய்வேன். அந்த பூஜைமுடிந்தப் பின் வழிபாட்டிற்கு பயன்படுத்திய பூக்களைஎல்லாம் என் உயிர் போன்ற அவளை அணுகி அந்த பூவினைக் கொடுப்பேன். அந்தப் பூவைப் போலவே அழகாக அந்தப் பெண் சிரிப்பாள்.

“என்னையின்றெனக் கைந்து பிராயத்தில்

பொன்னை யென்னுயிர் தன்னை யணுகலும்

பூவை புன்னகை நன்மலர் பூப்பாள் காண்”

பாரதியார் தனக்கு ஏற்பட்ட காதல் அனுபவத்தில் தன்னுள் ஏற்பட்ட மாற்றங்களையும். உடலில், மனதில் ஏற்பட்ட உணர்வுகளை மனித சமூகத்திற்கே எடுத்து இயம்பியதின் முக்கிய நோக்கத்தை நாம் அறிதல் வேண்டும். காதலுற்றவன் பிற உயிரை, தன் உயிராகப் போற்றி காப்பான். அவனால் மட்டுமே உலகத்தை தன் கட்டுக்குள் கொண்டு வரமுடியும். என்பதை பாரதி தன் அனுபவத்தில் உணர்ந்தவற்றை எடுத்து இயம்புகிறார்.

## அன்பும் பண்பும்

மனிதர்கள் தன் வாழ்வை முழுமையாக. வாழ அன்பு முதன்மைக் காரணியாக அமைகின்றது. அன்பை முழுமையாக உணராத வரையிலும் அவர்களுடைய வாழ்வில் முழுமைத் தன்மையை அடையமுடியாது. ஒவ்வொறு மனிதனும் தன் வாழ்க்கையைப் பகுத்தறியக்கூடிய அறிவை பெறவேண்டும். அன்பு எய்தி வாழும் வாழ்க்கையால் அற்புதமான ஒரு உலகியலை உருவாக்குமுடியும். அன்பு வயப்படுதல் என்பது ஆதி மனிதன் தோற்றத்திலிருந்து நிகழ்ந்து கொண்டு வரக்கூடிய ஒரு நிகழ்வு. அன்பிற்கு தன்னை ஈன்றவர்கள் தன் உயிரைக் கொடுத்ததை உலக வரலாறு கூறுகிறது. காதல் என்னும் அன்பு அழகானது. அது ஒவ்வொரு மனிதனையும் அழகாக்கும். உடலில் மனதில் நல்ல பண்பை ஏற்படுத்தும், பக்குவத்தை ஏற்படுத்தும், தீமையை ஒழிக்கும். நல்லது எது கெட்டது என்பதை உணர வைக்கும். வாழ்வின் அடுத்தக்கட்ட நிகழ்வை வடிவமைக்கும். அனைத்து வலியையும் உணர வைக்கும். அன்புக்குரியப் பண்பியலைக் கூறிக் கொண்டே போகலாம். வாழ்க்கைக்குரிய இன்பியலை உணரவைக்கும். வள்ளுவரும் அன்புக்குறித்த தன் கருத்தினை பதிவு செய்துள்ளார் (Govindan, 2003).

அன்பிலார் எல்லாம் தமக்குரியர் அன்புடையார்

என்பும் உரியர் பிறர்க்கு (குறள் -72)

அன்பு இல்லாதவர், எல்லாம் தமக்கே என உரிமை கொண்டாடுவர், அன்பு உடையவரோ தம் உடல், பொருள், ஆவி ஆகிய அனைத்தும் பிறருக்கென எண்ணிடுவர்.

அன்புஈனும் ஆர்வம் உடைமை அதுஈனும்

நண்பு என்னும் நாடார் சிறப்பு ( குறள்-74)

அன்பு பிறரிடம் விருப்பம் உடையவராக வாழும் தன்மையைத் தரும்: அ்து எல்லாரிடத்தும் நட்பு என்றுசொல்லப்படும் அளவற்ற சிறப்பைத் தரும்

அன்பகத் தில்லா உயிர்வாழ்க்கை வன்பாற்கண்

வற்றல் மரந்தளிர்ந் தற்று (குறள்-78)

அகத்தில் அன்பு இல்லாமல் வாழும் உயிர் வாழக்கை வளமற்ற பாலைநிலத்தில் பட்டமரம் தளிர்த்தாற் போன்றது.

அன்பின் வழியது உயிர்நிலை அ்திலார்க்கு

என்புதோல்போர்த்த உடம்பு (குறள்-80)

அன்புநெஞ்சத்தின் வழியில் இயங்குவதே உயிருள்ள உடலாகும் இல்லையேல், அது எலும்பைத் தோல் போர்த்திய வெறும் உடலேயாகும் (Parimelalhagar, 1951).

உலக இயக்கமே அன்புவயப் பட்டவர்களால் இயங்கிக் கொண்டுள்ளது. ஒவ்வொருருடைய செயலிலும் அன்பு பொதிந்துள்ளது அதுவே அவர்களை இயக்குகிறது. புது விடையங்களுக்கு வித்திடுகிறது. தன் காதலை துணிந்து சொன்ன பாரதி இந்த உலக இயக்கம் வரை வாழ்ந்துக் கொண்டே இருப்பார். அந்த பசுமையான நினைவுகளை பாரதி வெளிப்படுத்திய விதம் மானுடர்கள் அன்பை புறந்தள்ளி விடக்கூடாது என்பதற்காகவே. அவற்றை துணிந்து பதிவு செய்தார். காதலில் ஈடுபடும்போது உலகத்தில், மனிதன் புதுமையைக் கண்டுணர்வான். எப்படியாயினும் உலக இயக்கம் அன்பு வயப்பட்டவர்களால் மட்டும் இயங்கிக் கொண்டுள்ளது என்பது மறுக்க முடியாத உண்மை. பாரதி காதலுக்கு கொடுத்த முக்கியத்துவம் தந்ததை அனைவரும் உணருதல் வேண்டும். அவனுடைய கண்ணன் என் காதலன். கண்ணம்மா என் காதலி பாடல்கள் வழி அறியலாம்.

பாரதியின் கண்ணம்மா என் காதலி என்னும் பாடலில்

தீர்த்தக் கரையினிலே தெற்கு மூலையிலே செண்பகத் தோட்டத்திலே

பார்த்திருந்தால் வருவேன் வெண்ணிலாவிலே

பாங்கியோடென்று சொன்னாய்

வார்த்தை தவறிவிட்டாய் -அடி கண்ணம்மா மார்பு துடிக்குதடீ

பார்த்த விடத்தில்லெல்லாம் உன்னைப் போலவே பாவை தெரியுதடி ! (கண் என் -காதலி-1)

என்றபாடலில் உள்ள வரிகள் பாரதியின் காதல் ஆழத்தினையும், ஏமாற்றத்தின் வலியையும் தன்மையையும் வெளிப்படுத்தி உள்ளது.

## முடிவுரை

பாரதியை புதுமையாக சிந்திக்கதூண்டியது இந்த உணர்வுதான். கவிஞன் பாரதியை உணர்ந்தவர்களிடம் பக்தி, காதல், வீரம், சமூகம், புரட்சி, சாதி, விடுதலை உணர்வு, புதிய யுகம், புதிய சிந்தனை, பெண்மையைப் போற்றுதல் உலகியலைப் போற்றுதல் நட்பியலைப் போற்றுதல் போன்றவை. புதிய வளர்ச்சிக்கு எடுத்துச் செல்லும். காதல் வயப்பட்டவர்களை இந்தச் சமூகம் அழிக்கிறது உலகத்திலேயே இல்லாமல் மறைக்கிறது இத்தனைப் பெரிய கவி இத்தனை ஆற்றல் பிறப்பெடுத்ததற்கு காரணம் அவனில் எழுந்த காதலே! காதல் ஒரு உலகியலையே உற்பத்தி செய்யும். அதில் அறமும், அன்பும் தழைத்து நிற்கும். உலகம் ஒழுங்குபடும் நல்லதை மட்டுமே யோசிக்கும். இதை உணர்த்த இந்த மகாகவி தன் உயிரை உருக்கி தன் உணர்வை உளியாக்கி காவியம் படைத்தான். தன் காதலையும் துணிந்து பதிந்தான். காதல் வயப்பட்ட ஆன்மாக்களை அளித்த மனித உருவில் வாழும் மிருகங்களுக்கு ஒருமுறையேனும் காதல் உணர்வு இந்தப்பிரபஞ்சம் வழங்கவேண்டும். இத்த நிலை தன்னுடைய எதிரிக்கு கூட வரக்கூடாது என்பதையும், அது தரும் வலியையும் அவர்கள் உணரவேண்டும். மற்ற உயிர்கள் பட்டவேதனையை அவர்கள் அடைந்தால் மட்டுமே பிறஉயிரை தம் உயிராக எண்ணுவர். புன்னகைவீசிய

பெண்ணிற்காகக் காவியம் பாடைத்தார் பாரதி. ஒன்றை பெறாது எந்த ஒன்றும் நிகழாது என்பதை உலகதிற்கு உணர்த்திவிட்டார். வாழ்க பாரதியின் கனவு, வாழ்க பாரதியின் பிள்ளைக்காதல்.

## References


Govindan, V. (2003) Mahakavi Baharathiar Kavithaikal, New Century Book House, Chennai, India

Parimelalhagar, (1951) Thirukkural, Saiva Siddhanta Works Publishing Society, Tinnevelly, Limited, Chennai, India

Sivalinganar, A., Visayaragavan, K. (2015) Tholkappiyam - poruladhigaram (Urai valam) : Puraththinaiyial, International Institute of Tamil Studies, Chennai, India


## Conflict of interest

The Author has no conflicts of interest to declare that they are relevant to the content of this article.

## About the License

© The Author 2024. The text of this article is open access and licensed under a Creative Commons Attribution 4.0 International License

## Cite this Article

V. Geetha, Bharati's Love for Children, Indian Journal of Multilingual Research and Development, Vol 5, Iss 3, (2024) 7-16. DOI: https://doi.org/10.54392/ijmrd2432